## ஜனதிரிய நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 பெறவேண்டிய கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற 05 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 337,447 இனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பின்வரும் கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 78,571,052 | விபரமான பட்டோலைகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| சில்லறைக் காசு கட்டுநிதி | 12,141 | சில்லறைக் காசேடு |

| | | |
|---|---|---|
| கிடைக்கவேண்டிய வாடகை வருமானம் | 231,553 | வாடகை உடன்படிக்கை |
| பாதுகாப்பு வைப்பு | 10,000 | வைப்புச் சான்றிதழ் |

(ஆ) நிதியத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக 2008 செப்தெம்பர் 18 ஆந் திகதி அமைச்சின் செயலாளரினால் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (கட்டுப்பாடு) பங்குபற்றலுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2008 திசெம்பர் 30 ஆந் திகதிய குழு அறிக்கையின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படும் சொத்துக்கள் குறிப்பாக இனங்காணப்படாமல் பின்வரும் அவதானிப்புக்கள் காட்டப்பட்டிருந்தன.

| **விபரம்** | **2012 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் பிரகாரம் பெறுமதி** | **குழுவின் அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| | ரூபா | |
| காணி | 56,912,300 | ஜனகலா நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியாக இருத்தல் வேண்டும். |
| கட்டிடங்கள் (கிரயத்தில்) | 20,502,475 | ஜனகலா நிலையத்தின் கட்டிடமாக இருத்தல் வேண்டும். |
| தளபாடமும் உபகரணங்களும் | 746,090 | ஜனகலா நிலையத்தில் வைக்கப்பட வேண்டியவைகள். |
| அலுவலக உபகரணங்கள் | 333,250 | - மேற்படி - |
| விடுதிகள் மற்றும் சமயலறை உபகரணங்கள் | 76,937 | - மேற்படி - |

2012 பெப்ரவரி 16 ஆந் திகதி இச் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது நிதியத்திற்குச் சொந்தமான எவ்வித சொத்துக்களும் ஜனகலா நிலையத்தில் காணப்படாமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2009 இன் 68 ஆம் இலக்க கிராமோதய சபைகள் நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1982 இன் 28 ஆம் இலக்க கிராமோதய சபைகள் நிதிய அதிகாரச் சட்டத்தின் 7(2)(எ) பிரிவின் பிரகாரம் நிதிக்கட்டுப்பாடு மற்றும் அதற்குரிய கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக உரிய வகையில் பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 316,366 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,047,514 ஆக இருந்தமையால் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,363,880 அல்லது 115 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. ரூபா 316,366 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுச் சீராக்கத்தினைத் தவிர வேறு எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியம் செயற்பாடற்றுக் காணப்படுகின்றமை

1982 இன் 28 ஆம் இலக்க கிராமேதய சபைகள் நிதிய அதிகாரச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் கிராமோதய சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரம் எதையும் அமுல்படுத்தும் போது ஏதாவது கிராமோதய சபையினால் ஆரம்பிக்கப்பட்ட ஏதாவது வேலை அல்லது செயற்திட்டத்தினை செய்வதற்காக அந்த கிராமோதய சபைகளுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல் நிதியத்தின் அடிப்படைக் கருதுகோளாக இருந்தது. 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 16 வருடங்களில் செயற்பாட்டு நடவடிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாது நிதியம் முழுமையாக செயற்பாடற்றிருந்தது. நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு நிதியத்தின் பணத்தினை பொதுத் திறைசேரிக்கு அனுப்பும் வகையில் அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் 2011 சனவரி 07 ஆந் திகதிய பீஎப்/எப்டீ/04/21 – வீஓஎல்-ii ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் நிதியத்தில் காணப்பட்ட ரூபா 165,806,672 தொகையான மொத்தப் பணமும் முன்னைய ஆண்டின் போது பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) நிதி முகாமைத்துவம்